

The Word of Christ Team Workers

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2015-2017
Posted at Batlagundu Post office on 10 th Sep. 2015

*Our Radio & TV Programs*
Sri Lanka Radio SW 25,41 Meter
on Saturday 5.30P.M &Tamilan TV
on Monday 6.00 A.M &
Saturday 6.15 P.M

**To**

*Cell : 94435 58041*
*Phone : 04543 263 278*
*E-Mail arjunanglory@gmail.com*

If Undelivered Kindly Return to

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan

தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 15 | செப்டம்பர் 2015 | கனி 10




**THE WORD OF CHRIST**

"கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக" - கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்



# World Evangelism Gospel Media



**Arjunan in Tamil on Tamilan TV & Radio:**
TV:Every Monday 6.00-6.15 a.m and Every Saturday 6.15-6.30 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio.
*(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradhana TV:**
Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 p.m **on Rakshana TV:**
*(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile: 09844 70763)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel.
*(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Friday 6.00-6.15 a.m.
*(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Sunday 10.00-10.30 p.m and Monday 7.00-7.15 a.m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**Sunny, Francis & Vinay David in Hindi on TV:**
Every Sunday and Tuesday 7.00-7.30 p.m on ShubhSandesh Channel.
*(NEW DELHI Contact Mobile: 09810896789)*


**THE WORD OF CHRIST**
Monthly Magazine

**Editor**
**B.ARJUNAN**
**Associate Editor**
**K.R.K.Ravi Asir**


அநேகரைப்போல, நாங்கள் தேவவசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்டபிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவசந்தியில் பேசுகிறோம் - 2கொரி.2:17

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
**மாத இதழின் உள்ளே...**


ஆசிரியருரை
ஜெ.சி.சோட்,
பெட்டி சோட் அவர்களின் செய்தி
ஜெர்ரிபேட்ஸ்
அவர்களின் வேதபாடம்,
சகோ.ராஜாமணி, சகோ. ஜான் எஸ் நாதன்,
சகோ.அடைக்கலசாமி அவர்களின் செய்தி
வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி
மற்றும் பல...


"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




# வேத அறிவுப் போட்டி எண்: 181

## போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியையும் எழுதி அனுப்பவும். விடை நவம்பர் மாத இதழில்!

1. யாருடைய மாமன் நீர் செய்கிற காரியம் நல்லதல்ல என்றான்?
2. தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தவன் யார்?
3. பெண்ணோடு சம்யோகம் பண்ணுகிறதுபோல ஆணோடே சம்யோகம் பண்ணவேண்டாம் அது எப்படிப்பட்டது என வேதம் எச்சரிக்கிறது?
4. கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததென்று நீ அறியவேண்டுமோ, என்று எப்படிப்பட்ட மனுஷனை பார்த்து சொல்லுகிறார்?
5. யாருடைய வார்த்தையின்படியே பூமி தன் வாயைத்திறந்து, அவர்களையும் அவர்கள் வீடுகளையும் அவனுக்குரிய மனிதர்களையும், அவர்களுக்கு உண்டான சகல பொருள்களையும் விழுங்கிப்போட்டது?
6. உலகத்தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்து, தமது மூலமாய்த் தேவன்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்காக இந்தக் கடைசிக் காலங்களில் வெளிப்பட்டவர் எவர்?
7. என் வார்த்தைகளை... உங்கள் வீட்டு நிலைகளிலும் உங்கள் வாசல்களிலும் எழுதுவீர்களாக என்று எவர்களுக்கு கர்த்தர் கற்பித்திருந்தார்?
8. தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்கு எதுவும், எதுவும் பெருகும் என அப்போஸ்தலன் எழுதுகிறான்?
9. உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சொன்னபடி அவர்தாமே உங்களுக்காக யுத்தம்பண்ணுகிறார் என்று சொன்ன இஸ்ரவேலன் யார்?
10. சத்தியத்தினால் ஒரு பொய்யுமுண்டாயிராதென்பதை நீங்கள் அறிந்திருக்கிறதினாலும் உங்களுக்கு எழுதுகிறேன் என்று எழுதும் அப்போஸ்தலன் யார்?

## தபித்தாள்

- யோப்பா பட்டணத்தில் வசித்தவள்
- நல்லவேலை செய்யக்கூடிய பெண்
- நல்ல கிறிஸ்தவளாக சாட்சியுள்ளவளாக வாழ்ந்தாள்
- அராமிக் பெயர் தொற்க்காள்
- பேதுரு அவளை உயிரோடு எழுப்பினார் - அப்.9:36
- புதிய ஏற்பாட்டு சகோதரிகளுக்கு எடுத்துக்காட்டான ஒரு ஸ்திரீ.



**Tabitha**

சிறுவர் பகுதி

## எதிராளிகளுக்கு அப்பமும் தண்ணீரும் கொடுக்க சொன்ன எலிசா

*வேதபகுதி: 2இராஜாக்கள் 6:9-23*



இஸ்ரவேலின் ராஜாவுக்கு எலிசா தீர்க்கதரிசனம் சொல்லிக்கொண்டு வந்தான். இதனால் இஸ்ரவேலின் ராஜா மிகவும் எச்சரிக்கையாயிருந்தான். இந்தக் காரியத்தினிமித்தம் சீரியராஜாவின் இருதயம் குழம்பி, அவன் தன் ஊழியக்காரரை அழைத்து நம்முடையவர்களில் இஸ்ரவேலின் ராஜாவுக்கு உளவாயிருக்கிறவன் யார் என்று நீங்கள் எனக்கு அறிவிக்கமாட்டீர்களா என்று கேட்டான். அதற்கு அவன் ஊழியக்காரரில் ஒருவன்; ராஜாவே, நீர் உம்முடைய பள்ளி அறையிலே பேசுகிற வார்த்தைகளையும் இஸ்ரவேலிலிருக்கிற தீர்க்கதரிசியாகிய எலிசா இஸ்ரவேலின் ராஜாவுக்கு அறிவிப்பான் என்றான். அப்படியானால் அவனைப் பிடிக்கும்படி நீங்கள் போய் அவன் எங்கே இருக்கிறான் என்று பாருங்கள் என்று சொல்லி, இரதங்களையும் பலத்த இராணுவத்தையும் அனுப்பினான்; அவர்கள் இராக்காலத்திலே வந்து பட்டணத்தை வளைந்து கொண்டார்கள். எலிசாவின் வேலைக்காரன் அதிகாலமே எழுந்து வெளியே புறப்படுகையில் இதோ, இராணுவமும் குதிரைகளும் பட்டணத்தைச் சுற்றி இருக்கக் கண்டு ஐயோ, என் ஆண்டவனே என்ன செய்வோம் என்றான். அதற்கு எலிசா என்ன சொன்னான் தெரியுமா? பயப்படாதே; அவர்களோடிருக்கிறவர் களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம் என்றான். உடனே எலிசா விண்ணப்பம்பண்ணி: கர்த்தாவே, இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும் என்றான். உடனே கர்த்தர் அந்த வேலைக்காரன் கண்களைத் திறந்தார்; இதோ எலிசாவைச்சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும் இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதை அவன் கண்டான்.

பின்பு சீரிய இராணுவம் அவனிடத்தில் வருகையில், எலிசா கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணி; இந்த ஜனங்களுக்குக் கண் மயக்கம் உண்டாகும்படி செய்யும் என்றான்; எலிசாவுடைய வார்த்தையின்படியே அவர்களுக்குக் கண் மயக்கம் உண்டாகும்படி செய்தார். அப்பொழுது எலிசா அவர்களை பார்த்து: இது வழி அல்ல இது பட்டணமும் அல்ல; என் பிறகே வாருங்கள் நீங்கள் தேடுகிற மனுஷனிடத்தில் உங்களை அழைத்துச் செல்வேன் என்று சொல்லி சமாரியாவுக்கு அழைத்து சென்று பின்பு கர்த்தரை நோக்கி ஜெபித்து இவர்கள் பார்க்கும்படி செய்யும் என்றான். அப்படியே அவர்கள் பார்த்து சமாரியா என்று கண்டார்கள். இஸ்ரவேலின் ராஜா உடனே இவர்களை வெட்டிபோடலாமா என்று கேட்டான். அதற்கு எலிசா நீ வெட்டவேண்டாம். இவர்கள் புசித்து குடிக்க அப்பமும் தண்ணீரும் வையும் என்றான். அந்தப்படியே பெரிய விருந்து பண்ணி அவர்கள் புசித்துக் குடித்த பின்பு அவர்களை தங்கள் ஆண்டவனிடத்திற்குப்போகும்படி அனுப்பி விட்டார்கள். அதன் பின்பு சீரியரின் தண்டுகள் இஸ்ரவேலின் தேசத்திலே அப்புறம் வரவில்லை. நாமும் நமக்கெதிராக வரும் சத்துருக்களை சபிக்காமலும் அவர்களை அழிக்காமலும் எலிசாவைப்போல அவர்களுக்கு ஆகாரம்கொடுத்து அனுப்புவோம்.

**மனப்பாட வசனம்**

"...உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்குப் போஜனம் கொடு;
அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு;
நீ இப்படிச் செய்வதினால் அக்கினித் தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய்" (ரோமர் 12:20)




# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST


புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 15 செப்டம்பர்-2015 கனி - 10


ஆசிரியருரை

## ஒரே நம்பிக்கை

## The One Hope



நம்பிக்கை இல்லாமல் வாழ்க்கையில்லை. நாம் ஒவ்வொருவரும் நம்பிக்கையோடு ஒவ்வொருநாளும் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். ஒருவர் நான் நம்பிக்கையில்லாமல் வாழ்ந்துகொண்டிருக்கிறேன் என்று சொல்லமுடியாது. நம்பிக்கையானது விசுவாசத்தின் மூலமாக வருகிறது. விசுவாசமில்லாவிட்டால் நம்பிக்கை இல்லை. ஒரே நம்பிக்கையைக் குறித்து பரிசுத்தவேதாகமத்தில் படிக்கிறோம். "உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு" (எபே.4:4). நம்மை பரமஅழைப்புக்கு அழைத்த தேவன் ஒரே நம்பிக்கைக்கு அழைத்திருக்கிறார். அவருடைய அழைப்பு மாறாததாயிருக்கிறது. அழைத்த தேவன் உண்மையுள்ளவர். நாம் அந்த நம்பிக்கையை உறுதியாய் பற்றிக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். சிலகாரியங்களில் ஒற்றுமையாக இருக்க சிலர் ஒன்று கூடுகிறார்கள். ஆனால் நாளடைவில் அவர்களுடைய ஐக்கியம் நிலைநிற்காமல் உடைந்துபோகிறது. நாம் அந்தவிதமாக அழைக்கப்படவில்லை, "தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்" என்று அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்திய கிறிஸ்தவர்களுக்கு எழுதின கடிதத்தில் வாசிக்கிறோம் (1கொரி.1:9).

நாம் கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்படுகிறோம். நாம் அவரோடு ஐக்கியமாயிருக்கவேண்டுமானால் கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தை நம்மிடம் இருக்கவேண்டும். அப்பொழுது அவரோடு ஐக்கியப்படமுடியும். இனம் இனத்தோடு சேரும் என்பார்கள். அவர் பரிசுத்தர் நாமும் பரிசுத்தவான்களாக இருந்தால்தான் அவரோடு ஐக்கியம் கொள்ளமுடியும். அவரோடு ஐக்கியப்படுவதற்கு நாம் உடைகளை மாற்றவேண்டிய அவசியம் இல்லை. சிலர் வெளிவேஷமாகவே இருக்க விரும்புகின்றனர். அவருடைய ஐக்கியம் ஆவிக்குரியதாக இருக்கிறது. ஆகையால், "அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே நிலைத்திருக்கக்கடவன்" என்று 1கொரி.7:20-ல் வாசிக்கிறோம். நீங்கள் ஒரு போதகராய் அழைக்கப்பட்டிருந்தால், போதகராயிருந்துகொண்டு கிறிஸ்துவினுடைய ஐக்கியத்தில் வளர்ச்சியடையவேண்டும். ஒரு விசுவாசியாக அழைக்கப்பட்டிருந்தால் விசுவாசத்தில் இருந்துகொண்டு கிறிஸ்துவினுடைய ஐக்கியத்தில் வளர்ச்சியடையவேண்டும். ஒரு கிறிஸ்தவ எஜமானனுக்கு வேலைக்காரனாக இருப்பாயானால், நீ ஒரு நல்ல

வேலைக்காரனாக உண்மையும் உத்தமும் உள்ள வேலைக்காரனாக இருந்து, உன் எஜமானன் உன்னைப்போல ஒரு கிறிஸ்தவனாயிருப்பதினால் தேவனுக்கு நன்றி சொல்லிக்கொண்டு, அவனுக்குக் கீழ்ப்படிந்து வேலைசெய்யவேண்டும். இந்த விஷயத்தில் யாரும் யாரையும் அடிமை கொள்ளக்கூடாது. ஏனெனில் நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டவர்கள். ஆகையால் மனுஷர்களுக்கு அடிமைகளாகாதிருங்கள்.

மேலும் பவுல் சொல்லுகிறார்; "எப்படியெனில், சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை. ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார்" (1கொரி.1:26,27). நாம் யாரும் முன்னே ஞானிகள் இல்லை வல்லவர்கள் இல்லை. ஆனாலும் தேவன் நம்மை தகுதிப்படுத்தினார். அழைத்த தேவன் வல்லவராயிருக்கிறபடியினாலே நம்மை தகுதிப்படுத்தினார். இப்படி ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்ட நாம் நம்பிக்கையில் தளர்ந்துபோகாமல் கிறிஸ்துவோடு உள்ள ஐக்கியத்தில் உறுதிப்படுவோம். எகிப்திலிருந்து இந்தவிதமான நம்பிக்கைக்கு அழைக்கப்பட்ட இஸ்ரவேலர் வழியிலே தங்களைக் கெடுத்துக்கொண்டார்கள். அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: "நீ இறங்கிப்போ; எகிப்துதேசத்திலிருந்து நீ நடத்திக்கொண்டுவந்த உன் ஜனங்கள் தங்களைக் கெடுத்துக்கொண்டார்கள். அவர்களுக்கு நான் விதித்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலகினார்கள்; அவர்கள் தங்களுக்கு ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்து, அதைப் பணிந்துகொண்டு, அதற்குப் பலியிட்டு; இஸ்ரவேலரே, உங்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்று சொன்னார்கள் என்றார்" (யாத்.32:7,8). எகிப்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த தேவனை விட்டு அவ்வளவு சீக்கிரமாய் கெட்டுப்போனார்கள். அவர்களுடைய நம்பிக்கை தண்ணீரில் கழுவும் சாம்பலைப்போல போனது. இச்செய்தியை கேட்கும் அன்பு நேயரே, உங்களுடைய நம்பிக்கை எத்தகையது? நீங்கள் கர்த்தரால் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டு இருக்கிறீர்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்.

இந்த ஒரே நம்பிக்கை நமக்குள் திட நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. பவுல் சொல்லுகிறார்; "அவரைப் பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் நமக்குத் தைரியமும் திடநம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கிறது" என்கிறார் (எபே.3:12). நம்பிக்கையில்லாமல் ஒருவரும் தேவனை தரிசிக்கமுடியாது. தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மை தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறவர் என்றும் விசுவாசிக்கவேண்டும் என காண்கிறோம். "உழுகிறவன் நம்பிக்கையோடே உழவும், போரடிக்கிறவன் தான் நம்புகிறதில் பங்கடைவேன் என்கிற நம்பிக்கையோடே போரடிக்கவும் வேண்டியதே, ஆகையால், அது நமக்காகவே எழுதியிருக்கிறது" என்கிறார் பவுல் (1கொரி.9:10). உழுகிறவனுக்கு நம்பிக்கை இல்லையென்றால் அவன் உழவேண்டிய அவசியமில்லை. வேறு ஏதாவது ஒரு வேலையைப் பார்த்துவிட்டுப்போகலாம். உழுகிறவன் இந்த வருடம் நல்ல விளைச்சலை அறுவடைசெய்வோம் என்ற நம்பிக்கையோடு உழவுசெய்கிறான். அதைப்போல போரடிக்கிறவனும் பலனைப் பெற்றுக்கொள்வோம் என்ற நம்பிக்கையோடே போரடிக்கிறான். அந்தப்படியே பிரசங்கிக்கிறவன் சபையில் அநேக ஆத்துமாக்கள் வந்துசேரும் என்ற நம்பிக்கையோடே பிரசங்கிக்கும்போது அது ஆத்துமாக்களாலே நிறைக்கப்படும். நம்புகிறவர்களுக்கு நல்லதே நடக்கும். உங்களுடைய நம்பிக்கை எப்படியோ அப்படியே உங்களுடைய விசுவாசமும் இருக்கும். சிலவேளைகளில் பவுலுடைய ஊழியத்தில் அவனுடைய விசுவாசம் அற்றுப்போகத்தக்கதாக சோதனை வந்தது. ஆனாலும் தளர்ந்துபோகாதிருந்தான்.



மிகவும் அதிகம் என்றார் (லூக்.14:25-33) அப்படியே உங்களில் ஒருவன் தனக்குள்ள யாவற்றையும் வெறுத்து விடாவிட்டால் என்னுடைய சீஷனாயிருக்க மாட்டான் என்றார் (லூக்.14:21).

நாம் இயேசுவை இரட்சகராக அறிய வேண்டுமென்றால் நம் வாழ்க்கை சுயம், மற்றும் உடைமைகள் ஆகியவற்றின்மீது அவருக்குள்ள அதிகாரம் நம்மால் முற்றிலும் அங்கிகரிக்கப்பட வேண்டும்.

3 பிரதான வேலையில் நாம் மனந்திரும்புதலையும், பாவமன்னிப்பையும் பிரசங்கிக்க வேண்டும் (லூக்.24:47).

மனந்திரும்புதலில்லாமல் பாவமன்னிப்பில்லை. மனந்திரும்புதலுக்கு வாழ்க்கை முழுவதும் ஒப்படைக்க வேண்டும். நம்முடைய சுயநல வழிகளை விட்டு விடுவதுதான் மனந்திரும்புதல். பின் தேவனுடைய வழிகளுக்கு கீழ்ப்படிந்து அவரோடு ஐக்கியப் படுவதாகும். இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்பது அநேகருடைய போதனையாக இருக்கிறது. எந்த விதமான இணைப்புமில்லாமல் அவரை ஏற்றுக் கொள்ள முடியுமென்று அநேகர் நினைக்கின்றனர். உங்கள் ஜீவியத்தையும், முழு சித்தத்தையும் மாற்றலாம் ஆனால் அதுவே இரட்சிப்பை தந்துவிடாது.

எப்படியிருப்பினும் இயேசுவானவரே சொன்ன வார்த்தைகளை சிந்தித்துப் பாருங்கள். என் கற்பனைகளைப் பெற்றுக் கொண்டு அவைகளை கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான். என்னிடத்தில் அன்பாயிருப்பவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான் நானும் அவனில் அன்பாயிருந்து அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார் (யோவா.14:21).

3. கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதென்றால் அவருடைய சித்தத்திற்கு முற்றிலும் ஒப்படைக்க வேண்டும். அவருடைய கற்பனைகளை உண்மையாய் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால் என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்" என்றார் (யோவா.15:10).

**நிறைவாக**

அதனால் இரட்சிப்பு என்னும் ஈவு இலவசமாக கொடுக்கப்பட்டாலும் அது மிகப் பெரிய விலையுடன் வந்தது. எவ்வளவு நற்கிரியைகளினாலும் இரட்சிப்பை சம்பாதிக்கவோ அல்லது உயர்ந்த தகுதியினிமித்தமோ கொடுக்கப்பட முடியாது.

வாழ்நாள் முழுவதும் கவனமாக ஊழியம் செய்தாலும் இன்னும் நாம் அப்பிரயோஜனமான வேலைக்காரர்களே (லூக்.17:10)

ஆனால் இயேசுவின் கர்த்தத்துவம் நம்மை அவருடைய அதிகாரத்துக்கு முற்றிலும் சரணடையச் சொல்கிறது (மத்.28:18-20). ஆம், இரட்சிப்பென்னும் ஈவு மிகவும் விலையுயர்ந்தது. பரலோகம் அறிவிக்கக் கூடியதைப் பார்க்கிலும் தேவனுக்கு அது அதிக விலையைக் கொடுக்க வைத்தது. இயேசுவுக்கு அது அந்த மனவேதனையையும், சிலுவையின் அவமானத்தையும் தந்தது.

இதை யாரெல்லாம் உண்மையாய் ஏற்றுக் கொள்கிறார்களோ அவர்களெல்லாரும் எவ்வளவு விலை கொடுக்க வேண்டியிருக்கும். இம்மையிலும் நித்தியத்திலும் அவருடையவர்களாக இருக்கும் அனைத்து வாழ்க்கையும் ஆத்துமாக்களும் தங்களை முற்றிலும் அவருக்கு கீழ்ப்படுத்த வேண்டியது அவசியம்.

3. இவ்வளவுக்கு இது தகுதியானது தானா? தகுதியானது தான் என்று பவுல் எழுதுகிறார் (1கொரி.2:9).

4. உனக்கு இரட்சிப்பை அருளும்படி இயேசு அதற்குரிய உயர்ந்த விலையைக் கொடுத்துவிட்டார். அதைப் பெற்றுக் கொள்ளும்படி கொடுக்கவேண்டிய அதிக விலையை நீங்கள் கொடுத்துவிட்டீர்களா? (அப்.2:36-39).


# பாடம் -14 இலவச ஈவின் உயர்ந்த விலை

*- Jerry Bates*

## The High Cost of A Free Gift

**-மொழியாக்கம் சகோ.தானியேல், சென்னை**

**- சென்ற மாத இதழின் தொடர்ச்சி**




2. அவர் தன்னைத் தாழ்த்தி சிலுவையின் மரணபரியந்தமும் அடிமையின் ரூபமெடுத்தார்.

பரிசுத்த ஆவியானவர் என்ன விலை கொடுக்க வேண்டியிருந்தது.

1. எபேசியர் 4:30-ல் பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்துவதைப் பற்றிப் பேசப்படுகிறது.

2. தன்னை கனவீனமாய் நடத்தும்போதும் எதிர்க்கும் போதும் மனிதனோடு ஆவியானவர் நீடிய பொறுமையுள்ளவராய் துன்ப மநுபவிக்கிறார்.

இரட்சிப்பின் ஈவை சாத்தியமாக்குவதற்கு மூன்றும் ஒன்றான தேவத்துவத்தில் ஒவ்வொருவரும் மிக அதிகமாகவே தியாகம் செய்துள்ளனர். நிச்சயமாகவே இதை அளிப்பதிலே நாம் கொடுக்கப்பட்டுள்ள மிக உயர்ந்த விலையை காணமுடியும்.

இந்த ஈவை ஏற்றுக்கொள்ள செலுத்தவேண்டிய உயர்ந்த விலை. நம்மை நாமே வெறுத்துத் தள்ளவேண்டிய உயர்ந்த விலையை நாம் கொடுக்கவேண்டும். மிகவும் மகிழ்ச்சியுடன் இதற்குரிய விலை கொடுத்து பவுல் இதைக்குறித்து விவரமாக பல பகுதிகளில் சொல்லியுள்ளார்.

ஆகிலும் எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளை கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். அதுமாத்திரமல்ல என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்ட மென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன் (பிலி.3:7,8).

2. தன்னை ஒருவர் முற்றிலும் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுக்காது அறைகுறைமனதோடு கிறிஸ்துவையும் அவருடைய இரட்சிப்பையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இதுதான் அநேகருக்கு கிறிஸ்துவின் சுவிசேஷம் கடினமான சுவிசேஷமாய் தோன்றுகிறது.

1. இயேசு கிறிஸ்துவை தங்களுடைய இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஆசைப்படுகின்றனர். ஆனால் தங்கள் வாழ்க்கையின் ஆண்டவராக அல்ல.

சிலர் இயேசுவை இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்வதென்பது இரண்டு வேறுபட்ட விஷயங்களென்று யோசனை சொல்லுகின்ற அளவுக்கு பேசுகின்றனர். ஆனால் இவை இரண்டுமே பிரிக்க முடியாதவைகள். மற்றவர்களை தவறான வழியில் சிந்திக்க வைத்து விட்ட மதத் தலைவர்கள் கூட தங்கள் வழிகளிலுள்ள தவறுகளை உணரத் தொடங்கிவிட்டனர்.

சபையானது தனக்கு கிடைத்துள்ள உயர்ந்த வாய்ப்பின் வேளையிலே செயலாற்றிருக்கிறது. ஏனென்றால் தேவனுக்கு மிகவும் விலையுள்ள ஒன்றை மிகவும் எளிதாக நமக்குக் கிடைத்துவிடும் என்று நாம் தேவதூஷணம் சொன்னதினாலே நாம் நம்முடைய சபையை கடினமான சுவிசேஷத்தோடு சந்திக்கும் தைரியமற்றவர்களாகி விட்டோம் என்பது டாக்டர் பால் கேல்வின் பைன் பொதுச் செயலாளர் கிறிஸ்தவ கல்வி நிர்வாக சபை பிரிஸ்பிட்டேரியன் சபை என்பவரின் கூற்று.

2. "ஒருவனும் இயேசுவை தன் வாழ்வின் ஆண்டவராக ஏற்றுக்கொள்ளாமல் அவரை இரட்சகராக அடைய முடியாது"

இயேசு தாமே தன் போதனைகளைக் கேட்டவர்களிடம் சீஷத்துவத்தின் விலை



பவுல் தனக்கு வந்த ஒரு காரியத்தைச் குறித்துச் சொல்லும்போது; "சகோதரரே, ஆசியாவில் எங்களுக்கு நேரிட்ட உபத்திரவத்தை நீங்கள் அறியாதிருக்க எங்களுக்கு மனதில்லை, என்னவெனில், பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக, எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று. நாங்கள் எங்கள்மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக, மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம். அப்படிப்பட்ட மரணத்தின்றும் அவர் எங்களைத் தப்புவித்தார், இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம்" என்பதாய் எழுதுகிறார் (2கொரி.1:8-10). கர்த்தரிடத்தில் கொண்ட திடநம்பிக்கையினால் அவர்கள் தப்புவிக்கப்பட்டார்கள். நாங்கள் எங்கள்மேல் நம்பிக்கையாயிராமல் என்ற ஒரு வார்த்தையை சொல்லுகிறார். இன்றைக்கு நம்மில் அநேகர் நம்பிக்கையை தங்கள் மேல் வைத்திருக்கிறார்கள். நம்மை நாமே இரட்சிக்கமுடியுமா? ஒருக்காலும் முடியாது. உலகத்தையே ஆண்டு வழிநடத்தும் கர்த்தர் ஒருவரே நம் எல்லோரையும் இரட்சிக்கமுடியும். மேலும், பவுல் தன்னுடைய கப்பல் பயணத்தின்போது அவரோடு இருந்த அநேகர் தப்பிப்பிழைப்போம் என்கிற நம்பிக்கை இல்லாது பயப்பட்டனர். அப்பொழுது பவுல்; அவர்களைத் தைரியப்படுத்தி, "என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவருமான தேவனுடைய தூதனானவன் இந்த இராத்திரியிலே என்னிடத்தில் வந்துநின்று. பவுலே, பயப்படாதே, நீ இராயனுக்கு முன்பாக நிற்கவேண்டும். இதோ, உன்னுடனேகூட யாத்திரைபண்ணுகிற யாவரையும் தேவன் உனக்குத் தயவு பண்ணினார் என்றான். ஆனபடியினால் மனுஷரே, திடமனதாயிருங்கள், எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன் என்றான்" (அப்.27:22-25). அநேகரிடத்தில் நம்பிக்கையில்லாதபடியால் பயத்தின் ஆவி அவர்களைத் தொற்றிக் கொள்ளுகிறது. தாங்கள் பயத்தின் ஆவியையுடையவர்களானபடியால் மற்றவர்களையும் பயப்படும்படி செய்துவிடுகிறார்கள். அன்பானவர்களே திடமனதாயிருங்கள்.

பேதுரு சொல்கிறார்; "கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையைக்குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்" (1பேது.3:15). பல வருடங்களாக கிறிஸ்தவர்களாக இருக்கிறவர்களிடத்தில் அவர்களுடைய நம்பிக்கையைப் பற்றிக்கேட்கும்போது பலர் சோர்வான பதிலையே சொல்லுகிறார்கள். அதேவேளையில் புதிதாக கிறிஸ்துவுக்குள் வந்தவர்களை சந்தித்துக்கேட்டால் கர்த்தர் செய்த நன்மைகளை கணக்கில்லாமல் சொல்லுவார்கள். முந்தினோர் பிந்தினோராகவும், பிந்தினோர் முந்தினோராகவும் இருப்பார்கள் என்ற வசனத்திற்கேற்ப இருக்கிறார்கள். நம்முடைய நம்பிக்கையை குறித்து விசாரித்துகேட்கிற யாவருக்கும் நாம் சாந்தத்தோடு பதில் சொல்லவேண்டியவர் களாயிருக்கிறோம். அதை கர்த்தர் கேட்கிறார் என்ற உணர்வோடு அவர்கள் மத்தியில் நாம் சொல்லவேண்டும். எனக்கு ஒன்றும் கர்த்தர் செய்யவில்லை என்று எந்த ஒரு மனிதனும் சொல்லமுடியாது. ஏனெனில் அவன் உயிரோடிருப்பதே அவருடைய கிருபையினால்தான். அப்படியிருக்கும்போது எனக்கு ஒன்றும் கர்த்தர் செய்யவில்லை என்று சொல்லிவிடமுடியாது. நாம் எதற்காக ஆண்டவர் இயேசுவை பின்பற்றுகிறோம். நமக்கு அவர் கொடுக்கப்போகும் வாக்குத்தத்தம் என்ன? என்பதை அறிந்திருக்கிறோம். அந்த நம்பிக்கையினாலே அவரில் விசுவாசம் கொண்டுள்ளோம். இந்த நம்பிக்கையை அவர்களோடு பகிர்ந்துகொள்ளும்போது அவர்களும் அந்த வாக்குத்தத்தைப்பற்றிக்கொள்ள வழி ஏற்படும். ஆகையால் உங்களிடத்தில் விசாரித்துக்கேட்கும்போது எனக்கு வேலை இருக்கிறது. பின்பு சந்திப்போம் என்று சொல்லாதிருங்கள். சமயம் வாய்த்தாலும்

வாய்க்காவிட்டாலும் கர்த்தருடைய வார்த்தைகளை உபதேசிக்க ஆயத்தமாயிருக்க வேண்டும். எரிகோ பட்டணத்தில் வேவுக் காரரை ஏற்றுக்கொண்ட வேசி "நீங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டபோது; கர்த்தர் உங்களுக்கு முன்பாகச் சிவந்த சமுத்திரத்தின் தண்ணீரை வற்றிப்போகப்பண்ணினதையும், நீங்கள் யோர்தானுக்கு அப்புறத்தில் சங்காரம் பண்ணின எமோரியரின் இரண்டு ராஜாக்களாகிய சீகோனுக்கும் ஓகுக்கும் செய்ததையும் கேள்விப்பட்டோம். கேள்விப்பட்டபோது எங்கள் இருதயம் கரைந்துபோயிற்று, உங்களாலே எல்லாருடைய தைரியமும் அற்றுப்போயிற்று; உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும், கீழே பூமியிலும் தேவனானவர்" என்றாள் (யோசு.2:10,11). அவளுடைய நம்பிக்கையின் அறிக்கையைப் பார்த்தீர்களா, இந்த விசுவாசத்தினாலே அவளும் அவளுடைய குடும்பமும் காக்கப்பட்டது.

தாவீது தன் நம்பிக்கையை சவுல் ராஜாவிடம் அறிக்கையிட்டான்."என்னைச் சிங்கத்தின் கைக்கும் கரடியின் கைக்கும் தப்புவித்த கர்த்தர் இந்தப் பெலிஸ்தனுடைய கைக்கும் தப்புவிப்பார் என்றான்" (1சாமு.17:37). தாவீதுடைய நம்பிக்கை இளம்வயதில் அற்புதவிதமாக இருந்தது. ஆகையால் கர்த்தர் அவனோடிருந்தார். இன்று நம்மோடு கர்த்தர் இருக்க நம்முடைய நம்பிக்கையை அவர் மீது வைத்து நம்மிடத்தில் கேட்கிறவர்களுக்கு கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தவேண்டும். அப்படிச்செய்வீர்களா! பவுல் சொல்லுகிறார்: "கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக்குறித்து வெட்கப்படேன் என்று" (ரோம.1:6). அப்படி வெட்கப்படாத மனிதனாக வாழுங்கள். இயேசுவினால் பார்வையடைந்த பிறவிக்குருடன் தான் பார்வையடைந்த விதத்தை திரும்பத்திரும்ப தன்னிடத்தில் கேட்டவர்களைப் பார்த்து "அவருக்குச் சீஷராக உங்களுக்கு மனதுண்டோ என்றான்" (யோவா.9:27). அவன் சற்றும் சலிக்காமல் அவர்களுக்கு பதில் சொல்லி, கடைசியில், உங்களுக்கும் சீஷராக மனதுண்டோ என்றான். நம்முடைய நம்பிக்கையைக்குறித்து கேட்பவர்களிடம் சலித்துப்போகாமல் ஆண்டவரைப் பற்றி சொல்லி கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவோம்.

**இம்மைக்காக கர்த்தரிடத்தில் நம்பிக்கையாயிருப்பவர்களின் முடிவு எப்படியிருக்கும்?**

"இம்மைக்காமாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிகையுள்ளவர் களாயிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர் களாயிருப்போம்" என பவுல் குறிப்பிடுகிறார் (1கொரி.15:19). நம்முடைய நம்பிக்கை இம்மைக்குரிய காரியங்களைப் பற்றியதாக இருக்கக்கூடாது. பொதுவாக இம்மைக்குரியவைகளுக்காக கர்த்தரைப் பின்பற்றுகிறவர்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள். ஆகாயத்துப்பறவைகளைக் கவனித்துப்பாருங்கள் அவைகள் விதைக்கிறதும் இல்லை களஞ்சியங்களில் சேர்த்துவைக்கிறதுமில்லை அவைகளையும் தேவன் பிழைப்பூட்டுகிறார். இவைகள் எல்லாம் நமக்கு தேவை என்பதை பிதாவானவர் அறிந்திருக்கிறார். ஆகையால் நம்முடைய நம்பிக்கையானது அழிந்துபோகாத நித்திய வாழ்வைக்குறித்ததாக இருக்கட்டும். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## ஆசிரியர் கடிதம்

வாசகர் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் தூய நாமத்தில் வாழ்த்துக்கள். தாங்கள் தொடர்ந்து மாத இதழைப் பெற்றுவருவீர்கள் என்று நம்புகிறோம். நீங்கள் கடிதம் எழுதும்போதும், வேத அறிவுப்போட்டியில் கலந்துகொள்ளும்போதும் உங்களுடைய பதிவு எண் அதாவது உங்கள் முகவரியில் உள்ள Ref.No யை தவறாமல் எழுதவும். இவ்விதழைக்குறித்த கருத்துக்களை வரவேற்கிறோம். உங்களுக்கு எவ்விதத்தில் இவ்விதழ் பயனுள்ளதாக இருக்கிறது என்பதை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பங்களுக்காகவும் தொடர்ந்து சபையாக ஜெபித்து வருகிறோம். கர்த்தர் உங்களோடிருப்பாராக!

- ஆசிரியர்





## வேதாகமத்தை ஆராய்வோம் தெளிவு பெறுவோம்

-John S. Nathan
94444 43378

**- சென்ற மாதஇதழின் தொடர்ச்சி**

**வகை தேடியவர்களில் நாம் யார்?**

5.லூக்.22:2 பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் இயேசுவை கொலை செய்யும்படி யோசித்து, ஜனங்களுக்குப் பயப்பட்டபடியினால் எவ்விதமாய் அப்படிச் செய்யலாமென்று வகைதேடினார்கள்.

6. வசனம் 3-ல் பன்னிருவரில் ஒருவனாகிய ஸ்காரியோத்தென்னும் ஊரைச்சேர்ந்தவன், யூதாஸ் என்ற மறு பெயர் கொண்ட (துதி) வனுக்குள் சாத்தான் புகுந்தான். அவன் பிரதான ஆசாரியர்களிடத்திலும் சேனைத்தலைவர்களிடத்திலும் போய், இயேசுவை காட்டிக்கொடுக்கும் வகையைக்குறித்து அவர்களோடே ஆலோசனை பண்ணினான் (வசனம் 6) இயேசுவை அவர்களுக்குக் காட்டிக்கொடுக்கும்படி சமயஞ்தேடினான். வியாழன் இரவில் இராப்போஜனத்தை இயேசுவுடன் பகிர்ந்து கொண்டவனும் 31/2 ஆண்டுகள் உண்டு உறங்கினவன் உணவு உண்ட கை உலர்வதுக்குள் அவரைக் காட்டிக்கொடுக்க அவருக்கு விலையாக 30 வெள்ளி காசு இந்திய ரூபாயின் மதிப்பு 1200 இது ஒரு அடிமையை சொந்தமாக்கிக்கொள்ள கொடுக்கும் கிரயபணமாகும்.

7. லூக்கா23:20 பிலாத்துவின் மனைவி (CIADIS PROCULA) க(கி)லவுதியா (2தீமோ.4:21-ல் கூறப்பட்டவர் அல்ல) தேசாதிபதியாகிய பிலாத்து நியாயாசனத்தில் உட்கார்ந்திருக்கையில், அவருடைய மனைவி அவனிடத்தில் ஆள் அனுப்பி, "நீர் அந்த நீதிமானை" ஒன்றும் செய்யவேண்டாம்; அவர் நிமித்தம் இன்றைக்குச் சொப்பனத்தில் (இரவு 12 மணியளவில்) யோவான் 18:14 வெகுபாடுபட்டேன் என்று சொல்லச் சொன்னாள் (மத்.27:19). பிரதான ஆசரியரும் வேதபாரகரும் மற்றும் உலகோர் யாவரும் இயேசுவை அநீதிமானாக எண்ணி நகையாடிக்கொண்டிருந்தபோது, பிலாத்துவின் மனைவி மட்டும் இயேசுவை நீதிமான் என்றதை நாம் நன்கு கூர்ந்து சிந்தித்திடவேண்டும்! "இயேசு குற்றமற்ற "நீதிமான்" என்ற முடிவுக்கு வந்த ஒரே ஒரு பெண்மணி மங்கையர்களுக்குள் ஒரு மாணிக்கமாக, மரகதமாக விசுவாசிகளின் முன்னோடியாக இருந்தது மட்டும் அல்லாமல் இயேசுவை விடுதலையாக்கும் மனதுடையவளாய் இயேசுவை விடுதலையாக்கிட வகை தேடியதால் பரலோகத்திற்கு போகும்போது நம்மையும் வரவேற்க நமக்காக காத்திருப்பாள் என்பதில் ஐயமில்லை!

8. தேசாதிபதி பொந்தியு பிலாத்து (Pontius Pilate) ரோம அரசின் 5-வது பிரதிநிதியாக யூதேயாவை கி.பி.26 முதல் 36 வரை யோவான்ஸ்நானன் இயேசுவுக்கு வழியை ஆயத்தப்படுத்துவதற்கு முன்பிருந்தும் அன்னா, காய்பாவும் பிரதான ஆசாரியர்களாக இருந்தபோது இவர் இராணுவ தளபதியாகவும் சீரியாவின் யூதேயா, சமாரியா, இதுமேயா (IDUMEA) வில் அதிகாரம் செய்து வந்தார். தன் ஆட்சியில் தொடக்க காலத்தில் நேர்மையற்றவராயும் கொடூர குணமுடையவராகவும் இருந்ததுடன் கிறிஸ்தவர்களுக்கு இன்னல்கள் இழைத்துவந்தார் என்பதை லூக்கா13:1. பிலாத்து சில கலிலேயருடைய இரத்தத்தை அவர்களுடைய பலிகளோடே கலந்திருந்தான். சிலர் கொலை செய்யவும் காரணமாயிருந்தான். அக்காலத்து சரித்திர ஆசிரியர் பிலோ யோசப்பாஸ் (Phild Jusephes) இவரை சீர் கெட்டவன் என்றார். **-தொடரும்**

## ஜெபியுங்கள்

- இம்மாதம் குழுளியில் நடைபெறவுள்ள The World Evagelism Retreat -க்காக....
- அக்டோபர் 2-ம் தேதி நாமக்கல் மாவட்டம் பாண்டமங்கலத்தில் நடைபெறவுள்ள கூட்டங்களுக்காக...
- குழுளியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய ஊழியங்களுக்காக...



## வாசகர் கடிதம்

ஸ்தோத்திரம். சகோ.அர்ஜூனென் அவர்களுக்கு இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துகிறேன் டிவியில் ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகளையும் பார்த்து மகிழ்ச்சியடைகிறோம்.

தாங்கள் வெளியிடும் பத்திரிகையை படிக்க விரும்புகிறோம். ஆகவே இலவசமாக மாத்திரம் அல்ல விலைக்கு வாங்க வேண்டியிருந்தாலும் வாங்குவதற்கும் தயாராக உள்ளோம். அதனுடைய விலை விபரங்களையும் நன்கு தெரிந்து கொள்ள விரும்புகிறோம். பத்திரிகையையும் அதனுடைய விபரத்தையும் தெரிவித்து அனுப்புமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

இப்படிக்கு
R.ஜீவரட்ணம்
நீலகிரி

## சபையைக் கட்ட ஒரு வழிகாட்டி
## A Guide to Build the church

நெகேமியா புஸ்தகத்தில் எருசலேமின் அலங்கங்கள் திரும்ப கட்டப்படுவதில் இஸ்ரவேல் ஜனங்களின் வேலையைப் பற்றி வாசிக்கிறோம். இன்று கர்த்தருடைய சபையை வெற்றிகரமாகக் கட்டும் பணியில் நாம் நியமிக்கப்பட்டவர்களாயிருப்போமானால் அவர்களுடைய வழிகாட்டுதல் நமக்கு உதவிசெய்யும். தயவு செய்து அவர்களுடைய வேலையை கவனியுங்கள்.

- அவர்கள் ஜெபித்தார்கள்
- அவர்கள் தங்கள் வேலையைத் திட்டமிட்டார்கள்
- அவர்கள் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்தினார்கள்
- அவர்கள் குறைகூறுவதை அசட்டை செய்தார்கள்
- அவர்கள் ஒவ்வொருவரும் வேலையில் தங்களை இணைத்துக்கொண்டார்கள்
- அவர்களுக்காக தேவன் யுத்தம் செய்து அவர்களோடிருந்தார் என்பதை நினைவுகூர்ந்தார்கள்

*-Selected*

**தூய காற்று பெற மரம் வளர்ப்போம்**



## நடப்புச் செய்திகள்

- மியான்மரில் 2013 ல் ஏற்பட்ட மதக்கலவரத்தை தொடர்ந்து அகதிகளாக இந்தியாவிற்கு வந்த 22 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பல மாநிலங்களில் தங்கியுள்ளனர்.
- தமிழகத்தில் நடப்பு ஆண்டு 145 லட்சம் டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்ய அரசு இலக்கு நிர்ணயம் செய்துள்ளது.
- திண்டுக்கல் மாவட்ட கிராமங்களில் எழுத படிக்கத்தெரியாதோருக்காக "7 நாளில் எழுத்தறிவு திட்டத்தை" காந்திகிராமபல்கலை செயல்படுத்தியுள்ளது.
- பிரிட்டன் மக்கள், தங்கள் மரணத்துக்குப்பின் தேவைப்படும் 18 சதுர அடி அளவுள்ள கல்லறைகளை, தவணை முறையில் பணம் செலுத்தி வாங்குகின்றனர். - நன்றி தினமலர் நாளிதழ்





# இலக்கை நோக்கி வெற்றிநடை போடு...

N.Adaikalasamy

**"....கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ, அதை நான் பிடித்துக் கொள்ளும்படி தொடர்கிறேன் - பிலி.3:12**

இந்தியத் திருநாட்டில் முன்னாள் குடியரசுத்தலைவர் திருமிகு அப்துல்கலாம் அவர்கள் இளைஞர்களைப் பார்த்து விடுக்கின்ற அறைகூவல், "நீங்கள் கனவு காணுங்கள்" என்பதாகும். கனவு என்பது ஒரு குறிப்பிட்ட இலக்கை ஒரு குறிப்பிட்ட காலத்தில் நிறைவேற்ற வேண்டும் என்ற தீர்க்கமான உள்மனதின் ஆழத்திலிருந்து எழக்கூடிய வாஞ்சையாகும் "2020 - இல் இந்தியா" என்பது இளைஞர்களுக்கு அவர் விடுக்கின்ற சவால்.

ஒரு முறை நான் அமெரிக்க தேசத்திற்கு சென்றிருந்தபோது அங்குள்ள ஸ்மித்ஸோனியன் என்ற அறிவியல் அருங்காட்சியகத்தைக் காணும் பாக்கியம் பெற்றேன். அங்குள்ள ஒரு கல்வெட்டில் (Plaque) பொறிக்கப்பட்டிருந்த வாசகம் காண்போரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளக்கூடிய சிந்தனையைக் கிளர்ந்தெழச் செய்யக்கூடிய ஒன்று என்பதில் அய்யமில்லை. ஆம் 1960 ம் ஆண்டின் தொடக்க நாட்களில் அன்றைய அமெரிக்க அதிபர் ஜான் F. கென்னடி அவர்களின் தீர்க்கதரிசனத்தோடு கூடிய கனவு அந்தக் கல்வெட்டில் வாசகமாக பொறிக்கப்பட்டிருந்தது. அவ்வாசகம் பின்வருமாறு "இன்னும் 10 ஆண்டுகளில் விண்வெளித்துறையில் வியத்தகு சாதனையை நிறைவேற்றி நிலவில் தடம் பதிக்க இந்த தேசம் தன்னை உறுதியுடன் அர்ப்பணித்துள்ளது" இந்த தீர்க்கமான நிலைப்பாட்டின் விளைவாக அமெரிக்க தேசம் விண்வெளித்துறையில் நிகழ்த்திய சாதனையை இவ்வுலகம் கண்டு வியந்ததை நாம் மறக்க முடியாது. ஆம், அந்தக் குறிப்பிட்ட காலத்திற்குள்ளாகவே அதாவது 1969 ஆம் ஆண்டு ஜூலை திங்களில் அமெரிக்க விண்வெளிக்கலம் தன் பயணத்தை வெற்றிகரமாக முடித்து முதன் முதலாக நிலவில் தடம் பதித்த நீர் ஆம்ஸ்ட்ராங்கின் வியத்தகு சாதனைக்கு அந்த தேசம் எடுத்துக்கொண்ட தரிசனத்தோடு கூடிய குறிக்கோள் ஆகும்.

எந்த ஒரு துறையிலும் தனிப்பட்ட வாழ்க்கையாயினும் சமுதாய வாழ்க்கையாயினும் ஊழியத்தின் பாதையிலும் குறிப்பாக கிறிஸ்தவ வாழ்க்கையிலும் இலக்கை நோக்கி வெற்றிபெற தீர்க்கமாக திட்டமிடுதலும் சரியான இலக்குமே ஆகும்.

திருமுழுக்கின் வாயிலாக கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று விசுவாச அறிக்கையிட்டு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்ட நம் அனைவரையும் பார்த்து தேவன் விடுக்கின்ற கட்டளை; "நீங்கள் உலகமெங்கும் போய் சகல ஜாதிகளுக்கும் நற்செய்தியை அறிவியுங்கள்" என்ற கட்டளை ஏதோ ஆதி திருச்சபையில் வாழ்ந்த சீடர்களுக்கு மாத்திரம் கொடுக்கப்பட்ட கட்டளை என்று நம்மில் அனேகர் அசட்டையாக இருப்பதைப் பார்க்கிறோம்.

திருத்தூதர் பவுலடியாரின் அனுபவத்தை நாம் பார்க்கும்போது நற்செய்திப் பணியைக் குறித்த தன்னுடைய தீர்க்கமான குறிக்கோளையும் தெளிவான திட்டத்தையும் தூய ஆவியானவரின் துணைகொண்டு நாம் சிந்தித்து செயலாற்றுவது சாலச்சிறந்தது. ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவதற்காக தன்னை ஒரு அடிமை என்று குறிப்பிடுவதை நாம் பார்க்கிறோம். தேவனுடைய இந்த மகத்தான திட்டத்தை நிறைவேற்ற அவர் பட்டபாடுகள், மேற்கொண்ட பயணங்கள் அவமானங்கள், சிறையிருப்புகள் எண்ணிலடங்காதவை. ஆனாலும் அவை எல்லாவற்றையும் மகிழ்ச்சியுடன் சகித்துக்கொண்டார் என்பதை வேதாகமப் பதிவுகள் தெளிவாக விவரித்துக் காட்டுகின்றன.

பிலி.3:7,8 ன் "எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன்" என்று வலியுறுத்தி கூறுவதை நாம் காணலாம். அநேக பாடுகளின் மத்தியிலும் தமது குறிக்கோளை வெற்றிகரமாக நிறைவேற்றிய பவுலடியார் தன் வாழ்க்கையின் இறுதியில் மகிழ்ச்சியோடு குறிப்பிடுகின்ற கீழ்க்கண்ட வார்த்தைகள் "நல்ல போராட்டத்தைப் போராடினேன் ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது" என்ற சாட்சியை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள நாம் தகுதியுள்ளவர்களா என்பதை சற்றே சிந்திப்போம்.

நம்மில் அநேர் தன் தந்தையுடன் பேருந்தில் பயணம் செய்கின்ற ஒரு குழந்தையைப்போல போய்ச்சேர வேண்டிய இடமும் காலமும் தெரியாத நிலையில் தன் தந்தையிடம் நச்சரிக்கின்ற குழந்தையைப்போலவே காணப்படுகிறோம் என்பதை தூய ஆவியானவர் துணையோடு சற்றே சிந்திப்போம்.

"இன்றே இரட்சண்ய நாள்" இனி காலம் செல்லாது எனவே ஒரு நல்ல தீர்மானத்தை மேற்கொள்வோம்.கர்த்தருடைய ஊழியத்திற்காக நம்மை அர்ப்பணிப்போம். இதுவே நம்முடைய பிரதான குறிக்கோளாக இருக்கட்டும். தேவகிருபையை பற்றிக்கொண்டு சாட்சிகளாக வாழ்வோம். ஜெயம் பெறுவோம். கர்த்தர் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக!

## கர்த்தருடைய பந்தியில் யார் பங்குகொள்ளமுடியும்?

### Who Can Partake Of The Lord`s Supper?

*J.C.Choate*



கர்த்தருடைய திருவிருந்து தம்முடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலுக்கு முன்பாக கிறிஸ்துவால் ஆரம்பிக்கப்பட்டது (மத்.26:26-28). அவர் அப்பம் தம்முடைய சரீரத்தைக் குறிக்கும் என்றும் பாத்திரம் அல்லது திராட்சபழரசம் தம்முடைய இரத்தத்தில் பங்கு கொள்ளுகிறவர்களை நினைவுறுத்துகிறதாக இருக்கும் என்றும் கூறினார். மேலும் அவர் தாம் பிதாவின் ராஜ்யம் அல்லது சபையில் தம்முடைய சீஷர்களோடு கூட பானம்பண்ணும் நாள்வரைக்கும் இதை பானம் பண்ணுவதில்லை என்றும் சொன்னார்.

நினைவுகூருதலாகிய இந்த பந்தியில் யார் பங்குகொள்ளுவார்கள்? கிறிஸ்துவின் சீஷர்கள், கிறிஸ்தவர்கள், தம்முடைய ராஜ்யத்தின் அதாவது சபையின், குடும்பத்தின் அங்கத்தினர்கள் (அப்.2:38,47). வாரத்தின் முதல் நாளிலே,.... ஞாயிற்று கிழமையிலே, கர்த்தருடைய நாளிலே நாம் கூடி வருகிற வேளையில் ....நாம், கிறிஸ்தவர்கள் யார்? கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள் யார்? என அறிந்துகொள்ளலாம்.

நிச்சயமாக ஒரு பிராந்திய சபையில் அதிக அங்கத்தினர்கள் இல்லாதிருந்தால், சபை அங்கத்தினர்கள் ஒருவரையொருவர் அறிந்திருப்பார்கள். ஆனால் உள்ளூர் பார்வையாளர்கள் மற்றும் குறிப்பாக மற்ற நகரங்களிலும் நாடுகளிலுமிருந்து வருகின்றவர்கள் அங்கு கூடிவரும் போது அவர்களைக் குறித்த காரியம் என்ன? பிராந்திய அங்கத்தினர்கள் அவர்களை சந்திப்பதற்கும் அவர்கள் அங்கத்தினர்களா அல்லது அங்கத்தினர் அல்லாதவரா என்பது பற்றி அறிந்து கொள்வதற்கும் நல்ல வாய்ப்பு கிட்டவில்லையென்றால் என்ன செய்வது? அறியப்படாத விருந்தாளிகள் புறக்கணிக்கப்படுகையில் அங்கத்தினர்களென கண்டறியப்பட்டவர்களுக்கு மட்டும் திருவிருந்து பரிமாறப்படுமா அல்லது பங்குகொள்ளும்படிக்கு எல்லாருக்கும் நல்ல வாய்ப்பளிக்கப்படுமா?



அவிசுவாசியாகிய ஒரு நபரை உன் வாழ்க்கைத் துணையாக அடைய விரும்பாதே. ஒரு வேளை உன் வீட்டில் எழுந்துள்ள கட்டாயத்தின் பேரில் அவ்விதமான துணையை ஏற்கத்துணியாதே, மனுஷருக்கு பயப்படுவதைப் பார்க்கிலும் கர்த்தருக்குப் பயப்படு. கர்த்தர் உன்னை உயர்த்துவார். நீ ஜீவனுள்ள தேவனுடைய ஆலயம் என்பதை மறந்து அந்த ஆலயத்தை கெடுத்து விடாதே. கிறிஸ்து இயேசுவுக்காக பாடுபட்டால் அவரோடுகூட ஆளுகையும் செய்வோம்.

அன்பான தாய்மார்களே! உபாகமம்7:2-4 முடிய உள்ள வசனங்களில் "....அவர்களோடே உடன்படிக்கை பண்ணவும் அவர்களுக்கு இரங்கவும் வேண்டாம். அவர்களோடே சம்பந்தம் கலவாயாக; உன் குமாரத்திகளை அவர்கள் குமாரருக்கு கொடாமலும், அவர்கள் குமாரத்திகளை உன் குமாரருக்குக் கொள்ளாமலும் இருப்பாயாக" என்று எழுதியிருக்கிறதே. இப்படியிருக்கும் போது நம் ஜனம், ஜாதி நம்மை ஒதுக்கி விடுமே அல்லது ஏளனமாய் பேசுவார்களே என்று சொல்லி உங்களது பிள்ளைகளுக்கு அந்நியரிடத்தில் சம்பந்தம் கலக்க நினைக்கிறீர்களா? வேண்டாம். கர்த்தரை தெய்வமாகக் கொண்ட ஜனமே பாக்கியமுள்ளது. ஒரு வேளை கர்த்தரின் கட்டளையை மீறுவோமானால் ஆவியானவரை துக்கப்படுத்துகிறவர்களாயிருப்போம். "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார், நாங்கள் அவனிடத்தில் வந்து வாசம் பண்ணுவோம்" என்று இயேசு கூறுகிறார் (யோவா.14:23). ஆம், அன்பான சகோதரிகளே, கர்த்தர் தெய்வமானால் அவரை முழுமனதோடு பின்பற்றுவோம். சுதந்திரமாக கர்த்தரை பின்பற்றும் இந்நாட்களில் சமுதாயத்தைக் கண்டு பயப்படவேண்டாம். சாத்ராக், மேஷாக், ஆபேத்நெகோ, தானியேல் போன்றோரை தப்புவித்து காத்து ரட்சித்த கர்த்தர் நம்மையும் அவ்விதமாக காத்து ரட்சிப்பார். அவர்களுக்குப் பங்காளிகளாகா திருங்கள். முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள்" (எபே.5:7,8). கர்த்தர் உங்களை பெலப்படுத்துவாராக!



JOIN OUR
WORLD EVANGELISM BIBLE SCHOOL
RIGHT NOW
Contact: 94435 58041

'ஒரே வழி' வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள் இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி, ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.

**Batlagundu Bible College, Post Box No. 5, Batlagundu-624 202, S.INDIA**

பெண்கள் பகுதி

## கர்த்தர் தெய்வமானால் அவரை பின்பற்றுங்கள்

If The Lord Be God, Follow Him

*J.Glory Arjunan*




அன்பான சகோதரிகளே, இன்று ஆவியானவர் நம்மை நோக்கி அறைகூவலிடும் இச்சத்தத்தை நம்மால் உணர முடிகிறதா? இன்றைய கிறிஸ்தவ சகோதரிகளுக்கு இது மிகத்தேவையான ஒரு அறைகூவல் என்றே எண்ணுகிறேன்.

அன்றைய நாளில் இஸ்ரவேல் ஜனங்களை நோக்கி எலியா தீர்க்கரிசி "...நீங்கள் எந்த மட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடப்பீர்கள்; கர்த்தர் தெய்வமானால் அவரை பின்பற்றுங்கள்..." என்றான். ஆம் சகோதரிகளே, கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொண்டு அநேகர் இவ்விதமாகத்தான் குந்திக்குந்தி நடக்கிறார்கள். கர்த்தரை ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்று இருதயத்தில் விசுவாசித்து, அறிக்கையிட்டு ஞானஸ்நானத்திற்கு ஒப்புக்கொடுத்த அன்று முதல் கிறிஸ்தவர்கள் அல்லது கிறிஸ்துவை உடையவர்கள் என்று உன்னத நிலைக்கு வந்து விட்டு இன்று குந்தி குந்தி நடப்பது ஏன்? காரணம், உலகக் காரியங்கள், இனம், ஜனம், ஜாதி, நிறம், பணம் என்ற பல வகையான உருவில் அநேகரை இருமனமுள்ளவர்களாக குந்திக் குந்தி நடக்கப்பண்ணுகிறதாய் இருக்கிறது. நமதாண்டவராகிய இயேசுகிறிஸ்து நான் உலகத்தானல்லாதது போல நீங்களும் உலகத்தாரல்ல என்கிறாரே! அவரை வஞ்சிக்க நினைக்கலாமா?

கிறிஸ்தவர்களாய் இருக்கிற நாம் உண்மையான முழு மனதுடன் கிறிஸ்துவினிடத்தில் அன்பு கூர்ந்து அவரை பின்பற்றுகிறவர்களாய் இருப்பதையே தேவன் நம்மில் எதிர் பார்க்கிறார். கர்த்தரை நம் தெய்வமாய் கொண்டிருந்தோமானால் அவரை பின்பற்றுவோம். எப்படி?

"கொரி.6:14-18 முடிய உள்ள வசனங்களில், அந்நிய நுகத்திலே விசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக, அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே, ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய் அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது நான் உங்களை ஏற்றுக் கொண்டு உங்கள் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வ வல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்" என்று எழுதியிருக்கிறதே.

இப்படியிருக்க அன்பு வாலிப சகோதரியே, உன் எதிர்காலத்தை குறித்து என்ன சிந்தித்துக் கொண்டிருக்கிறாய்? அவிசுவாசிக்கும், விசுவாசியாகிய உனக்கும் சம்பந்தமில்லையே. தேவன் அவ்விதமான சம்பந்தத்தை அல்லது திருமண உறவை நிச்சயமாகவே அங்கீகரிக்கமாட்டாரே. கிறிஸ்துவினிடத்தில் அன்பு கூருவாயானால் அவரது கற்பனைகளைக் கைக்கொள் (1யோவா.2:6).



சபை அங்கத்தினர்கள் மட்டுமே திருவிருந்தில் பங்கெடுக்க அனுமதிக்கப்பட வேண்டும் என சிலர் எண்ணுகின்றனர். இந்த வழக்கம் "நெருக்கமான ஐக்கியம்" ஆக ஒப்பிடப்படுகிறது, அதாவது கர்த்தருடைய திருவிருந்தில் பங்குகொள்ளுதல் அந்நியர்களுக்கு அடைக்கப்பட்டதாயிருக்கிறது. அறியப்பட்ட சபை அங்கத்தினர்கள் மட்டும் இதில் பங்கு கொள்ளலாம் ஆனால் நெருக்கமான ஐக்கியம் பயிற்சிக்கப்படும் போது, சில சபை அங்கத்தினர்கள் கூட வெறுமனே ஆராதனையில் கலந்து கொண்டு திருவிருந்தில் பங்குகொள்ளும் சந்தர்ப்பம் புறக்கணிக்கப்படலாம், ஏனென்றால் சபை ஊழியம் செய்பவருக்கு அவர்கள் அறிமுகமாகாதவராயிருக்கின்றார்கள். திருவிருந்தானது கர்த்தருடைய சபையில் அங்கத்தினராயிருப்பவர்களுக்கு மட்டுமே பரிமாறப்பட வேண்டியது என்பது உண்மையாகும். ஆனால் கிறிஸ்தவரல்லாதவர்கள் புசித்தால் என்ன செய்வது? இக்கேள்விக்கு விடையாக நான் இவ்வினா எழுப்புகிறேன்: திருவிருந்தில் பங்குகொள்ளும் தகுதியுடையவர் யார் என நியாயந்தீர்க்கும் அதிகாரத்தை மனிதருக்கு யார் கொடுத்திருக்கிறார்? நிச்சயமாக, ஒருவன் சபை அங்கத்தினனாக இல்லாவிட்டால் அல்லது அவிசுவாசமுள்ள அங்கத்தினனாக இருந்தால் அவன் இதில் பங்குகொள்ளக்கூடாது என நாம் அறிவோம்; ஆனால், திருவிருந்தினை புசிக்க விருப்பமுள்ள ஒருவனுக்கு பரிமாற மறுப்பதற்கு நாம் யார்? இவைகள் சம்பந்தமாக நாம் விசுவாசிக்க கிறிஸ்தவர்களாக இருக்கவேண்டும் எனக்கருதினால், நாம் அவர்களுடைய இருதயங்களை அறியமுடியாது. நம்முடைய அறிவுக்கு எட்டாமல், சிலர் தங்களுடைய வாழ்வில் ஒழுக்கமற்றவர்களாகவும், கடன்களை அடைக்கத் தவறியவர்களாகவும், தங்களுடைய இருதயத்தில் பாவம் நிறைந்த மனநிலையை உடையவர்களாகவும், குடும்ப தவறுகளினாலும் அல்லது நாம் அறியாத மற்ற காரியங்களில் நிலைத்திருப்பதினால் வேத வாக்கியங்களின்படி கர்த்தருடைய பந்தியில் பங்கு கொள்ளாத நிலையில் இருக்கலாம். ஒரு மனுஷனும் மற்ற மனுஷனுடைய இருதயத்தை நியாயந்தீர்க்கமுடியாது.

இக்கேள்விகள் அனைத்திற்கும் பதில் கண்டுபிடிப்பதற்குப் பதிலாக, பவுல் சொன்ன வார்த்தைக்கு செவி சாய்க்கவேண்டும், "இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக்குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்புவரும்படி போஜனபானம் பண்ணுகிறான்" (1கொரி.11:27-29). நாம் கேள்விப்படுகின்ற இக்கூற்றானது ஒரு மிகப்பெரிய விதி என நான் நினைக்கிறேன்: அதாவது தனிப்பட்ட ஒருவனை சோதிப்பது நமக்குரியதல்ல, ஆனால் அந்த தனிப்பட்ட ஒருவன் தான் பாத்திரவானா அல்லது அபாத்திரவானா என்பதைக்குறித்து வேதவாக்கியம் போதிக்கிறபடி தன்னைத்தானே சோதித்தறிய வேண்டும். நம்முடைய வேலை போதிக்க வேண்டியதே அதன்பின் ஒவ்வொருவனும் அவனுக்குள் அல்லது அவளுக்குள் கர்த்தருடைய திருவிருந்தில் அவர்கள் பங்குகொள்ளலாமா என்பது பற்றி தீர்மானித்துக் கொள்ளட்டும். ஒருவனை திருவிருந்தில் பங்குகொள்ளாதபடி நாம் தடுப்போமானால் அவர்கள் புண்படுத்தப்பட்டு மேற்கொண்டு சொல்லப்படும் போதனைக்கு செவிசாய்க்க மறுத்துவிடுவார்கள். அவர்கள் அவிசுவாச அங்கத்தினராயினும் அல்லது அங்கத்தினரல் லாதவராயினும்,அதில் பங்குகொள்வார்களானால், அவர்கள் இதுகுறித்து தொடர்ந்துபோதிக்கப்பட்டு அதன்பிறகு கடைசியாக அவர்கள் சத்தியத்தைக் குறித்த அறிவை அடைந்து தங்களுடைய நிலையை சரிசெய்து கொள்ளுவார்கள். ஒருவன் விசுவாசமில்லாத அங்கத்தினராயிருந்து கர்த்தருடைய திருவிருந்தில் பங்குகொண்டு வந்தால், நாம் பொறுப்புடையவர்களாயிருக்கிறோம். நாம் அந்த தனிப்பட்ட நபரிடம் சென்று, அன்பின் வழியில் அவனை (அல்லது அவளை) தன்னுடைய வாழ்விலுள்ள பாவத்தைச் சரிசெய்து அதன்பிறகே ஒரு விசுவாசமுள்ள கிறிஸ்தவனாக தகுதியான முறையில் கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்ள வேண்டுமென ஊக்கப்படுத்தவேண்டும். அத்தோடுகூட, ஒருவன்

கர்த்தருடைய சபையில் அங்கத்தினனாக மாறுவதற்கு ஒருபோதும் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவனாக இருந்தாலும்கூட, அவன் கர்த்தருடைய பந்தியில் பங்குகொண்டு வருகின்ற அந்த நபரை நாம் அறிந்திருந்தால், இது நாம் அந்த நபரிடம் சென்று, அவனோடு ஒரு வேதவகுப்பினை ஒழுங்குப்படுத்துவதற்கு நமக்கு ஒரு நல்ல வாய்ப்பினைத் தருகிறது. ஒருவேளை சேர்ந்து வேதத்தைக் கற்றுக் கொள்ளுவதின் மூலம் அவன் அல்லது அவள் கர்த்தருடைய பந்தியில் புசிப்பதற்கு கர்த்தர் திட்டமிட்டிருக்கிற நோக்கம் முழுவதையும் கற்றுக்கொள்ளமுடியும்.

பவுல் ஒருவன் கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்ளுவதற்கு முன் தன்னைத் தான் சோதித்தறிய வேண்டுமென சொல்லியபோது, அவன் மற்ற எவரைக்காட்டிலும் விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் என அழைக்கப் படுகிறவர்களுக்கே ஒருவேளை அறிவுறுத்தினார் என்று நாம் இதிலிருந்து புரிந்து கொள்ள முடியும் என நான் கருதுகிறேன். ஒருவரும் நம்முடைய இருதயத்தின் கிரியைகளை அறியமுடியாது. தேவனுக்கு முன்பாக ஒரு உத்தமமான சோதித்தறிதலை உருவாக்குவதும் எதுவெல்லாம் தவறானதாயிருக்கிறது என நாம் கண்டு சரிசெய்வதும் நம்முடைய கடமையாயிருக்கிறது.

கர்த்தருடைய பந்தி ஒவ்வொரு வாரமும் கிறிஸ்துவினுடைய மாபெரும் தியாகபலிக்கு நம்முடைய ஒப்புக்கொடுத்தலை புதுப்பித்துக்கொள்வதற்கும் நாம் உண்மையாகவே கிறிஸ்தவ ஜீவியம் ஜீவிக்கிறோமா அல்லது இல்லையா என அறிந்து கொள்வதற்கும் நமக்கு நல்லவாய்ப்பளிக்கிறது. நாம் கர்த்தரை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளுவதற்கு (யோவா. 4:24) நாம் இருக்க வேண்டிய பிரகாரம் இல்லையென்றால், நாம் ஒவ்வொரு வாரமும் தேவையான சீர்திருத்தலை உருவாக்கும்படிக்கு ஒரு நல்ல வாய்ப்பினைப் பெற்றிருக்கிறோம்.

நீங்கள் கிறிஸ்தவரா? ஒவ்வொரு வாரமும் கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்ளுகிறீர்களா? அவற்றினால் நீங்கள் பெலனடைந் திருக்கிறீர்களா? இவ்வழியில் கர்த்தரை நினைவுகூருவதன் மூலம் அவரை மகிமைப்படுத்து கிறீர்களா?


**கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் வேலை செய்ய சுவிசேஷகர்கள் (வாலிபர்கள்) தேவை. உணவும், உடையும், மற்றும் உறைவிடமும் கொடுக்கப்படும்.**

**இயேசு சொல்கிறார்:**
**"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்"**
**யோவான்12:26.தொடர்புக்கு :94435 58041**


தெரிந்து கொள்வோம்

# தெரியுமா!

- K.R.K.Ravi Asir
Associate Editor

▶ வேத காலத்தில் 'பிரம்மரிஷி தேசம்' என்று அழைக்கப்பட்ட பகுதி இப்போது இந்தியாவில் உள்ள உத்திரப் பிரதேச மாநிலம் ஆகும்.

▶ அமெரிக்க ஐக்கிய நாட்டின் மாநிலங்களுள் மேற்கு எல்லையிலுள்ள கலிபோர்னியா, தங்க மாநிலம் என்று அழைக்கப்படுகிறது. இங்கு பெரிய தங்கச் சுரங்கங்கள் உள்ளன.

▶ இந்தியா முதல் முதலாக 1948-ல் ஒலிம்பிக் போட்டியில் பங்கு பெற்றது. அப்போது ஒலிம்பிக் போட்டி லண்டனில் நடந்தது.

▶ டெலி என்கிற கிரேக்கச் சொல்லுக்கு தூரம் என்பது பொருளாகும். விஷன் என்றால் காட்சி என்பதாகும். தொலைக்காட்சி என்பதே டெலிவிஷன் ஆகும்.



காட்டுகின்றன. இந்த அத்தியாயத்தின் தொடக்கத்தில் குறிப்பிட்டபடி தேவனை கூடுதலாக விவரிக்க மனுஷ வார்த்தைகள் இல்லை. தேவனை உள்ளபடியே உணர்ந்து கொள்வதற்கு எந்த மனுஷ வார்த்தைகளும் இல்லை, தேவனை உள்ளபடியே உணர்ந்து கொள்வதற்கு எந்த மனுஷ சிந்தனையும் இல்லை.

நம்முடைய வரம்புக்குட்பட்ட திறமையினாலே வேத வாக்கியம் என்ன சொல்லுகிறது என்று நாம் வாசிக்கிறோம்; தேவன் பூரணராயிருக்கிறார், பரிசுத்தமானவராக, நீதி, நியாயம் உள்ளவராகவும் இருக்கிறார். அவருடைய சுபாவத்திலே ஏதாகிலும் அசுத்தமாக இருக்கும் என்பது புரிந்து கொள்ள முடியாத ஒன்றாக இருக்கிறது.

"கர்த்தர் இரக்கமும் மன உருக்கமும், நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர். கர்த்தர் எல்லார் மேலும் தயவுள்ளவர்; அவர் இரக்கங்கள் அவருடைய எல்லாக் கிரியைகளின் மேலுமுள்ளது. கர்த்தர் விழுகிற யாவரையும் தாங்கி, மடங்கடிக்கப்பட்ட யாவரையும் தூக்கி விடுகிறார்"

"நீர் உமது கையைத் திறந்து, சகல பிராணிகளின் வாஞ்சையையும் திருப்தியாக்குகிறீர்"

"அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு, அவர்களை இரட்சிக்கிறார்.... என் வாய் கர்த்தரின் துதியைச் சொல்வதாக; மாம்ச தேகமுள்ள யாவும் அவருடைய பரிசுத்த நாமத்தை எப்பொழுதும். என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கக் கடவது" (சங்.145:8,9,14,16).

"வானங்களே செவி கொடுங்கள், நான் பேசுவேன்; பூமியே என் வாய்மொழிகளைக் கேட்பாயாக. கர்த்தருடைய நாமத்தைப் பிரசித்தம் பண்ணுவேன்; நம்முடைய தேவனுக்கு மகத்துவத்தைச் செலுத்துங்கள்; அவர் கன்மலை; அவர் கிரியை உத்தமமானது; அவர் வழிகளெல்லாம் நியாயம், அவர் நியாயக் கேடில்லாத சத்தியமுள்ள தேவன்: அவர் நீதியும் செம்மையுமானவர் (உபா.32:',3,4).

**தேவனுடைய இயல்பு மாறுகிறதில்லை மாற முடியாது**

தாம் தொடர்ந்து இருப்பதற்காக வெளிப்புறத்திலுள்ள சக்தி எதையும் சார்ந்திருக்கிறதில்லை. அவர் இயல்பிலே நித்தியமானவர். அவருடைய அறிவு பூரணமானது, அவருடைய வல்லமை நிறைவானது, அவர் எங்கும் இருக்கிறார். அவருடைய குணாதிசயத்திற்கான காரணம் கற்பித்தல்கள் பிழையற்றவை தேவன் இருக்கிறவண்ணமாகவே இருக்கிறார். அவர் மாறக் கூடாதவர். அவர் என்ன சொல்கிறாரோ அல்லது செய்கிறாரோ அதை பூரண அறிவோடும் புத்தியோடும் செய்கிறார் ஆகையால் சரியான சத்தியத்தை வார்த்தைகளாக சொல்கிறார், அதை நாம் மாறுபாடில்லாத பிரமாணமாக வரையறுக்கிறோம்.

'நான் கர்த்தர், நான் மாறாதவர்..." (மல்கியா 3:6)

"நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந் துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை" (யாக்.1:17).

"தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம் மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (2பேது.3:9).

வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்" (யாத்.20:2-5).

தேவன் பொன்னினாலோ அல்லது வெள்ளியினாலோ அல்லது மரம் அல்லது மாம்சம், இரத்தத்தினாலோ உருவாக்கப்பட வில்லை ஆனால் அவர் ஆவியிலே நித்தியமானவராக இருக்கிறார். அவருடைய பிரசன்னம் எங்கும் இருக்கிறது. அவர் குறிப்பிட்ட அளவான கிரியைகள் கொண்ட மாம்ச சரீரத்திற்கு கட்டுப்பட்டவர் அல்ல "கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: வானம் எனக்குச் சிங்காசனம், பூமி எனக்குப் பாதபடி; நீங்கள் எனக்குக் கட்டும் ஆலயம் எப்படிப்பட்டது? நான் தங்கியிருக்கும் ஸ்தலம் எப்படிப்பட்டது? என்னுடைய கரம் இவைகளையெல்லாம் சிருஷ்டித்ததினால் இவைகளெல்லாம் உண்டாயின என்று கர்த்தர் சொல்லுகிறார்" (ஏசா.66:1,2).

வேதாகம எழுத்தாளர்களில் ஒருவர் காரண காரியத்தோடு பேசுகிறார்:

"உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமூகத்தை விட்டு எங்கே ஓடுவேன்? நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர்; நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர். நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந் தரங்களிலே போய்த் தங்கினாலும், அங்கேயும் உமதுகை என்னை நடத்தும், உமது வலது கரம் என்னைப்பிடிக்கும். இருள் என்னை மூடிக்கொள்ளு மென்றாலும், இரவும் என்னைச் சுற்றி வெளிச்சமாயிருக்கும். பகலைப்போல வெளிச்சமாயிருக்கும்; உமக்கு இருளும் வெளிச்சமும் சரி.

"நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன், உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும்" (சங்.139:7-12,14).

**தேவன் பூரணராயிருக்கிறார்**

கடந்த கால மார்க்கங்களில் இருந்த தேவர்களும் தேவதைகளுமானாலும் சரி, அதைப்போல இன்று நடைமுறையில் இருக்கிறவைகளானாலும் சரி, அடிக்கடி அவைகள் மனுஷருடைய காரியங்களுக்கு அப்பாற்பட்டவைகளாயிருக்கின்றன அல்லது அப்படியே மனுஷரைப் போன்று மிகுந்த உற்சாகம், கோபம், பேராசைகள் மற்றும் தீய நடைக்கைகளில் அவர்களுடைய ஈடுபாடு; அல்லது தங்களுடைய வல்லமையில்மனுஷர்களுக்கு அப்பாற்பட்ட வகையில் பிரமிக்கத்தக்க மனுஷனாக தங்களுடைய வல்லமையில் இருப்பது ஆனால் அடிக்கடி அவர்கள் மற்ற தேவர்கள் அல்லது தேவதைகளால் தோற்கடிப்படுகிறவர்களாக அல்லது கொல்லப்படுகிறவர்களாக இருக்கிறார்கள்.

தேவர்களை குறித்து இப்படிப்பட்ட கருத்துகள் மனுஷருடைய மனதிலே எவ்வாறு தோன்றக் கூடும் என்பதை நாம் தர்க்க ரீதியாக உணர்ந்து கொள்ள முடியும். மனுஷர்கள் அவர்களை உற்று நோக்கும் பொழுது இத்தகைய தேவர்கள் தங்களை போன்றிருப்பதையும் ஆனால் பெரிதானவர்களாகவும், மிகுந்த வல்லமையுடைவர்களாய் இருப்பதையும் கற்பனை செய்து பார்க்க முடியும்.

இதற்கு மாறாக வேதவாக்கியங்கள் மனுஷனுடைய புத்திக்கு அப்பாற்பட்டவரும், நாம் நம்முடைய கற்பனையில் சிந்திக்க கூடிய எந்த ஒரு காரியத்துக்கும் அப்பாற்பட்டவருமாயிருக்கிறார். ஒரு தேவனை சித்தரித்து



## பணத்தால் எதையும் சாதிக்கமுடியுமா?

*-M.Rajamani*



அன்பானவர்களே, இன்றைய உலகில் பணத்தால் எதையும் செய்து கொள்ள முடியும், எதையும் சாதிக்கலாம் என்று பலர் நினைக்கின்றனர். பணம் பத்தும் செய்யும் என்பது வெறும் பழமொழிதான். பணத்தால் எல்லாவற்றையும் சாதிக்க முடியாது.

நாம் பணத்தைக் கொடுத்து மெத்தை வாங்கலாம் ஆனால் நித்திரை பெறமுடியாது. புத்தகங்களை வாங்கிப் படிக்கலாம் ஆனால் அறிவைப் பெற முடியாது. சுகமில்லை என்றால் மருந்துகள் வாங்கி சாப்பிடலாம் ஆனால் சுகத்தைப் பெற முடியாது. வீடுகளைக் கட்டலாம் ஆனால் குடும்பத்தை நடத்த முடியாது. வேலை வாய்புகள் கிடைக்கலாம் ஆனால் நல்ல வாழ்க்கை கிடைக்காது. புண்ணிய யாத்திரை செல்லலாம் ஆனால் ஆன்மீக இரட்சிப்பை அடைய முடியாது. பணத்தால் செய்யமுடியாதவைகளை நம் ஆண்டவர் இயேசு செய்கிறார்.

இந்த மெய்யான தேவனிடம் சிபாரிசுகள் பலிக்காது, பணமும் செல்லாது, பணம் கொடுத்து அவரை நாம் திருப்திபடுத்தவும் முடியாது. நமக்கு ஜீவன் தந்து, நாம் வாழ்வதற்கு காற்றையும், நீரையும் இலவசமாக கொடுத்து கிறிஸ்து இயேசுவின் மூலமாக நமக்கு பாவமன்னிப்பின் நிச்சயத்தைக் கொடுத்து, ஆன்மீக இரட்சிப்பைக் கொடுத்து, இவ்வாறாக பணமுமின்றி விலையுமின்றி வழங்குகிறார்.

தாகமுள்ளவன் மேல் தண்ணீரையும் வறண்ட நிலத்தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவேன்; உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன் என்றார் (ஏசா.44:3).

நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை இயேசு கிறிஸ்து சிலுவை மரணத்தினால் நமக்கு உண்டு பண்ணி உன்னதத்திற்கு ஏறிச் சென்றார். தேவ சமாதானத்தையும், இரட்சிப்பையும் அவரிடம் வரும் எவருக்கும் இலவசமாகவே தருகின்றார். "மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலை பெயர்ந்தாலும், என் கிருபை உன்னை விட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலை பெயராமலும் இருக்கும் என்று உன்மேல் மனதுருகிற கர்த்தர் சொல்லுகிறார்" (ஏசா.54:10).

மேலும் அன்பானவர்களே! "வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்கிறார்" (மத்.11:28). பணத்தால் சாதிக்க முடியாதவைகளை கர்த்தர் தம்முடைய அற்புதமான கரத்தினால் நமக்குச் செய்து முடிப்பார். அவரிடம் நீங்கள் கொடுக்கவேண்டியதெல்லாம் உங்களுடைய முழு இருதயத்தை அவருக்கு ஒப்புக்கொடுங்கள். உங்கள் வேண்டுதல்களை பரலோகத்தின் பிதாவாகிய தேவன் நிறைவேற்றுவார்.


## வேத அறிவுப்போட்டி எண் 178 ல் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| T.ஏஞ்சலின் நேசமலர் | - மதுரை |
| Mrs.லிங்காஜீவரத்னம் | - சிவகாசி |
| B.ஸ்டெல்லா | - கூத்தூர் |
| Dr.J.பேசில் தேவசகாயம் | - மதுரை |
| Mrs.சாந்தா பழநி | - தர்மபுரி |
| Sis.அல்லிராணி காட்வின் | - சென்னை |
| K.மோகன் | - குமாரபாளையம் |
| A.ரெபேக்காள் | - மதுரை |
| S.M.தவமணி தேவி | - திருப்பூர் |
| Mrs.ராஜம்மாள் | - திருப்பூர் |
| S.தங்கம் | - கன்னியாகுமரி |
| R.கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| M.ராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| Sis.தேவி ராஜசிங் | - திருப்பூர் |
| S.A.சாமுவேல் | - பரமத்தி |
| S.R.பெரியசாமி | - சேலூர் |
| T.ராஜாத்தி | - கோம்பை |
| J.ஆஷா ஹெலன் | - தூத்துக்குடி |

## வேத அறிவுப்போட்டி எண் 178 ன் விடைகள்

| | |
|---|---|
| 1.இயேசு கிறிஸ்து | - யோ.8:16 |
| 2.ஒன்றுமில்லை | - ஏசா.40:17 |
| 3.எரோதுவின் | - அப்.12:22 |
| 4.உண்மையாய் | - எரே.23:28 |
| 5.இறங்குகிற தேவனாலேயாம் | - ரோம.9:16 |
| 6.எகிப்துதேசம் | - எசே.29:12 |
| 7.பவுல் | - 1கொ.8:13 |
| 8.தானியேல் | - தானி.6:5 |
| 9.பவுல் | - 2கொ.12:19 |
| 10.யூதாவே | - ஓசி.6:11 |

**என் மகனே,**
**என் வார்த்தைகளைக் கவனி; என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய்**
**நீதிமொழிகள் 4:20**



## வேத அறிவுப்போட்டி எண் 179 ல் வெற்றிபெற்றவர்கள்


| | |
|---|---|
| Mrs.ராஜம்மாள் | - திருப்பூர் |
| S.சரோஜினி | - தராபுரம் |
| Dr.J.பேசில் தேவசகாயம் | - மதுரை |
| D.டேவிட் | - சென்னை |
| Tmt.மரகதம் திரவியம் | - கோம்பை |
| Sis.அல்லிராணி காட்வின் | - சென்னை |
| Sis.செம்புலிங்கம் அம்மாள் | - தூத்துக்குடி |
| R.கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| M.ராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| Sis.தேவி ராஜசிங் | - திருப்பூர் |
| T.ராஜாத்தி | - கோம்பை |
| A.ரெபேக்காள் | - மதுரை |
| K.மோகன் | - குமாரபாளையம் |
| B.ஸ்டெல்லாம்மா | - கூத்தூர் |
| S.லதாசூரியமூர்த்தி | - தேனி |
| T.ஏஞ்சலின் நேசமலர் | - மதுரை |
| D.சாந்தாதேவி | - தேனி |
| S.தங்கம் | - கன்னியாகுமரி |
| Mrs.சாந்தா பழநி | - தர்மபுரி |
| S.R.பெரியசாமி | - சேலூர் |
| Mrs.லிங்காஜீவரத்னம் | - சிவகாசி |
| J.ஆஷா ஹெலன் | - தூத்துக்குடி |
| Mrs.ருக்மணிஜெயசீலன் | - தேனி |
| S.A.சாமுவேல் | - பரமத்தி |

## வேத அறிவுப்போட்டி எண் 179 ன் விடைகள்

| | |
|---|---|
| 1.கிறிஸ்துவே | - கலா.3:16 |
| 2.பாழாய்ப்போகும் | - யோவே.3:19 |
| 3.தேவன் | - எபே.2:7 |
| 4.ஆமோஸ் | - ஆமோ.4:8 |
| 5.பவுல் | - பிலி.3:17 |
| 6.யோனா | - யோனா.3:3 |
| 7.ஆம் | - கொலோ.4:9 |
| 8.கோபத்தை | - நாகூ.1:2 |
| 9.யூதர்கள் | - 1தெச.2:15 |
| 10.பாவஞ்செய்தாய் | - ஆபகூ.2:10 |


தேவ செய்திகள் அடங்கிய CD & DVD எங்களிடம் உள்ளது ரூ.100/-
அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள் உங்கள் முகவரி மற்றும் மொபைல் எண்ணை SMS பண்ணவும். 9443558041










# தேவனிடத்திற்குச் செல்லும் வழியை மனிதன் கண்டு பிடிக்க முடியுமா?
# Can Man Find the Way to God?

பெண்கள் பகுதி



-Betty




**-சென்ற மாத இதழின் தொடர்ச்சி**

**தேவனைக் குறித்த கொள்கையில் வீழ்ச்சி**

உலகின் பல்வேறுபட்ட பிரதான மார்க்கங்களின் "தேவர்கள்" பற்றிய விளக்கங்களிலிருந்து, காலங்களும் தலைமுறைகளும் கடந்து செல்லும் பொழுது தேவனை குறித்த கொள்கை ஒட்டுமொத்தமாக சீர் கெட்டு போயிருக்கிறதை நாம் காணமுடியும் சாத்தான் எப்பொழுதுமே மனித சமுதாயத்தை அதன் சிருஷ்டிகர் பற்றிய விஷயத்தில் குழப்பம் அடையும் படி கிரியை செய்கிறவனாயிருந்திருக்கிறான்.

**தேவனை குறித்த வேதாகம கொள்கை (கருத்து)**

வேதாகமத்தின் தேவன் தனித்தன்மை உடையவராக இருக்கிறார். 1யோவான் 4:8-ல் எல்லாவகையிலும் வேதவசனம் குறிப்பிட்டிருக்கிறபடி அவர் அன்பின் சாராம்சமாக இருக்கிறார். அவர் மனுஷர்களை சிருஷ்டித்தவகையில் பகுத்தறியும் மூளைகள், அழிவில்லாத ஆத்துமாக்கள் இவற்றை நமக்கு அளித்திருப்பது விலை மதிக்க முடியாத பொக்கிஷமாகவும், அன்பின் ஈவாகவும் இருக்கிறது. தேவனுடனே கூடிய தனிப்பட்ட உறவில் பதிலீடாக நாம் தேவனை நேசிக்கத்தக்க வகையில் அந்த பலனுடனே நாம் உண்டாக்கப்பட்டோம். மேலும் "நாம் அவரோடே நித்தியமாக ஜீவிப்போம், நாம் உண்மையுள்ளவர்களாக அவருடைய பிள்ளைகளாக இருந்தால்" என்று அவர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். யார் தேவனிடத்தில் அன்பு கூருவதையும், அவருக்குக் கீழ்ப்படிவதையும் தெரிந்துகொண்டார்களோ அவர்கள் மத்தியிலே சிருஷ்டிகராகிய தேவனை குறித்த அறிவு ஆதாம், ஏவாள் காலத்திலிருந்து தலைமுறை தலைமுறையாக கடந்து வந்தது. நாம் ஆதியாகமம் புத்தகத்தில் வாசிக்கிறபடி குடும்பங்களுக்கு தலைவர்களாயிருந்த பிதாக்களுடனே தேவன் செயல்படுகிறவராயிருந்தார். பின்னர் மோசேயின் மூலமாகவும், அவரை பின்பற்றிய தீர்க்கதரிசிகள் மூலமாகவும், நாம் "பழைய ஏற்பாடு என்று அழைக்கிற தேவனுடைய செய்தியை அவர் பாதுகாக்கப்படும்படி செய்தார். தேவன் தம்மை மனுக்குலத்திற்காக வெளிப்படுத்தின செய்தியுடன் "புதிய ஏற்பாடு" நிறைவு பெறுகிறது.

வேதாகமத்தில் நாம் எந்த வகையான தேவனை நாம் காண்கிறோம்? அவர் நெருப்பாக அல்லது நீராக சூரியன் அல்லது சந்திரனாக, கல்லாக அல்லது மரமாக சித்திரிக்கப்டுகிறாரா?

"... உன் தேவனாகிய கர்த்தர் நானே. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம். மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும், யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க